**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கொடுமுடி**
**அசல் வழக்கு எண் : 65/2018**
**வாதி தரப்பு சாட்சி:1**

| | |
|---|---|
| பெயர்: (வா.சா.1 ) பரமசிவம் | நாள்: 10.02.2026 |
| த.பெ: ராமசாமி | |

**2026ம்** ஆண்டு பிப்ரவரி **மாதம் 10ம் நாள் செவ்வாய்கிழமை** வாதி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் உத்தரவின்பேரில் S.ராமகிருஷ்ணன் அவர்களால் ஆணையுறுதி பிரமாணம் செய்யப்பட்டது.

**வா.சா.1 – குறுக்கு விசாரணை தொடர்ச்சி (3 மற்றும் 4ம் பிரதிவாதிகள் தரப்பு):–**

**1)** நான் 9ம் வகுப்பு வரை படித்துள்ளேன். பரம்பரையாக விவசாயம் தான் தொழில் என்றால் சரிதான். இந்த வழக்கில் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்ற விவரம் தெரியும் என்றால் சரிதான். 3 மற்றும் 4ம் பிரதிவாதிகள் என்ன எதிர்வாதம் மற்றும் எதிர் கோரிக்கை கேட்டுள்ளார்கள் என்ற விவரம் தெரியும் என்றால் சரிதான். நானும், 3 மற்றும் 4ம் பிரதிவாதிகள் ஒரே கிராமத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். என்னுடைய முன்னோர்களும், 3 மற்றும் 4ம் பிரதிவாதிகளின் முன்னோர்களும் வேறு வேறு வம்சாவழிகள் என்றால் சரியல்ல, ஒரே வம்சாவழியை சேர்ந்தவர்கள். நான் யாருடைய வம்சாவழியை சேர்ந்தவர் என்றால் பழனிக்கவுண்டர் வம்சாவழியை சேர்ந்தவர். நான் பழனிக்கவுண்டர் வம்சாவழியை சேர்ந்தவர் என்பதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் ஏற்கனவே தாக்கல் செய்துள்ளேன். 1901, 1923 ஆகிய ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன். 1901, 1923 ஆவணங்களின் படி நான்தான் அவரின் வாரிசு என்பதை நிரூபிக்க பழனிக்கவுண்டர் இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசுச் சான்றிதழை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

**2)** 3 மற்றும் 4ம் பிரதிவாதிகளின் தகப்பனார் பெயர் சின்னப்ப கவுண்டர் என்றால் சரிதான். சின்னப்ப கவுண்டரின் அப்பா பெயர் குப்பணகவுண்டர் என்றால் சரிதான்.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.02.10 15:30:50 +0530

குப்பணகவுண்டரின் தந்தை பெயர் பழனிக்கவுண்டர் மகன் ராமணகவுண்டர் என்றால் சரிதான். ராமணகவுண்டர், குப்பணகவுண்டர், பழனிக்கவுண்டர் ஆகியோர்கள் இறந்துவிட்டார்கள் என்றால் சரிதான். ராமணகவுண்டரின் சகோதரர் பெயர் ரங்கப்ப கவுண்டர் என்றால் சரிதான். ரங்கப்ப கவுண்டர் திருமணம் ஆகாமலேயே இறந்துவிட்டார் என்றால் சரியல்ல. ரங்கப்ப கவுண்டர் திருமணம் ஆகாமலேயே இறந்துவிட்டார் என்றாலும், நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

3) ரங்கப்ப கவுண்டரின் வாரிசுகள் என்பதை காண்பிக்க ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள பத்திரம் 3 மற்றும் 4ம் பிரதிவாதிகளின் முன்னோர்கள் சம்மந்தப்பட்டது என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கில் புஞ்சை கொளாநல்லி கிராமத்தில் பழைய சர்வே எண்.667A ரீ சர்வே எண்.101/5ல் எனக்கு எவ்வளவு பூமி பாத்தியம் இருந்தது என்றும், ரீ.சர்வே எண். 101/6ல் எவ்வளவு பூமி பாத்தியம் இருந்தது என்றும் அருதியிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல. கூறியிருக்கிறேன். புஞ்சை கொளாநல்லி கிராமத்தில் 101/6ல் 4ம் பிரதிவாதி மணி அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. எனக்கும் பாகம் உள்ளது. சர்வ எண் 101/6ல் எனக்கு எவ்வளவு பாத்தியம் என்று இந்த வழக்கில் சொல்லவில்லை என்றால் சரியல்ல, சொல்லியுள்ளேன்.

4) என்னிடம் காண்பிக்கப்படும் வாதுரை சொத்து விவரத்தில் சர்வே எண்.101/6ல் எத்தனை செண்ட் என சொல்லவில்லை என்றால் சரிதான். ரீ.ச.எண்.101/6ல் எனக்கு பாத்தியமே இல்லை என்பதால்தான் நான் அருதியிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கில் சர்வே எண்.101/5 மற்றும் 101/6ல் எத்தனை செண்ட் பாத்தியம் என்றால் 101/5ல் – 13 1/2 செண்ட்டும், 101/6ல் 21 செண்ட்டும் உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை பத்திரத்தில் மூலபத்திரங்களை குறிப்பிட்டுத்தான் பிரித்துள்ளோம் என்றால் சரியல்ல, 101/5 மற்றும் 101/6ல் கண்டுள்ள சொத்துக்களுக்கு நான் ஐந்தாம் தலைமுறை என்பதால் மூலப்பத்திரம் என்னிடம் இல்லை.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.02.10 15:30:55 +0530

**5)** வா.சா.ஆ.1ல் மூல ஆவணங்களாக 11 ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.1 ஆவணத்தில் பக்கம் 5ல் மூல ஆவணங்களை குறிப்பிட்டு சொல்லி இவ்விதம் நமக்கு பிதுர்ராஜித வகையில் கூட்டாக பாத்தியப்பட்டதும், நம்முடைய சுவாதீன அனுபவத்தில் உள்ளதுமான சொத்துக்களை பாகம் பிரித்துக்கொண்டோம் என்றால் சரிதான். சர்வே எண்.101/5, 101/6 ஆவணங்கள் எதுவும் இல்லை என்றும், அவை பூர்வீக சொத்துக்கள்தான் என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. தாவா சொத்திற்கு வில்லங்கம் பார்த்துதான் வா.சா.ஆ.1 பாக பிரிவினை செய்து கொண்டோம் என்றால் சரிதான். தாவா சர்வே எண்.101/6ல் எனக்கு பாத்தியமில்லை என்றால் சரியல்ல.

**6)** வா.சா.ஆ.1 ஆவணத்தில் 3 மற்றும் 4 பிரதிவாதிகள் தரப்பினர்கள் இல்லை என்றால் சரிதான். அவர்கள் சாட்சிகளாகவும் இல்லை. வா.சா.ஆ.1 ஆவணம் எங்கள் குடும்பத்திற்குள் ஏற்படுத்திக் கொண்ட ஆவணம் என்றும், அது 3 மற்றும் 4ம் பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணம் எழுதிக் கொண்ட பிறகுதான் சின்னப்பகவுண்டருடன் சேர்த்து பட்டாவில் கூட்டாக பெயர் மாற்றம் செய்து கொண்டோம் என்றால் சரிதான். நான் பெயர் மாற்றம் செய்வதற்கு முன்னர் சின்னப்ப கவுண்டர் பெயர் மட்டும்தான் இருந்தது என்றால் சரிதான். குப்பண கவுண்டர் மகன் சின்னப்ப கவுண்டர் 3 மற்றும் 4ம் பிரதிவாதிகளின் தந்தை என்றால் சரிதான்.

**7)** வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள 11 மூல ஆவணங்களை தாக்கல் செய்ய இயலும் என்றால் இயலும். வா.சா.ஆ.1 எழுதுவதற்கு முன்பான வில்லங்க சான்றிதழை தாக்கல் செய்ய இயலுமா என்றால் தற்போது அந்த ஆவணம் இருக்குமா என தெரியவில்லை. 3 மற்றும் 4 பிரதிவாதிகளின் சொத்தை நான் அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் வழக்கை தாக்கல் செய்திருப்பதால்தான் மேற்படி ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணத்தின்படி சர்வே எண். 667Aல் எனது முன்னோர்கள் அனுபவித்து வந்ததற்கான வருவாய் துறை ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.02.10 15:30:59 +0530

**(வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.)**

**மறுவிசாரணை :–இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.02.10 15:31:02 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்

நீதித்துறை நடுவர், கொடுமுடி.